செய்தி வெளியீடு எண் : 237

நாள் 28.04.2021

<u>செய்தி வெளியீடு</u>

தமிழ்நாட்டில் தற்போது பெருகிவரும் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை கட்டுப்படுத்த அரசு போர்க்கால அடிப்படையில் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டுள்ளது. அதனில், பெருநகர மாநகராட்சிப் பகுதிகளில் நோய்த் தொற்றைக் குறைக்கும் பொருட்டு மாநகராட்சியின் ஒவ்வொரு மண்டலத்திற்கும் கள அளவிலான குழுக்கள் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைத்து கண்காணிக்கப்படுகிறது. பொது சுகாதாரம் மற்றும் மருந்து கட்டுப்பாட்டு இயக்குநரகத்தில் இயங்கிவரும் கோவிட் கட்டுப்பாட்டு அறையில் மாநில அளவில் மேற்கொள்ளப்படும் பெருந்தொற்று தடுப்புப் பணியில், நான்கு இந்திய ஆட்சிப் பணி பயிற்சி அலுவலர்களை சுழற்சி முறையில் பணியாற்ற ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

கோவிட் கட்டுப்பாட்டு அறையில் **29.04.2021** முதல் **12.05.2021** வரை பணிபுரிய ஆணையிடப்பட்ட கீழ்க்காணும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் அவர்களுக்கு நேராக குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மருத்துவ பணிகள் கழகத்துடன் இணைந்து பணிபுரிய ஆணையிடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வி. அனாமிகா ரமேஷ், இ.ஆ.ப., | – | பிராண வாயு தேவையினை கண்காணித்தல் |
| 2. | திரு. கௌரவ் குமார், இ.ஆ.ப., | – | அத்தியாவசிய மருந்துகள் இருப்பினை கண்காணித்தல் |
| 3. | செல்வி. ஆர். ஐஸ்வர்யா, இ.ஆ.ப., | – | மருத்துவமனைகள் படுக்கை இருப்பினை கண்காணித்தல் |
| 4. | திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., | | |

--- ---

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.